பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 20] சென்னை : ஆடி 27 (11—8—72) வெள்ளி

வெளியூர் : ஆடி 28 (12—8—72) சனி [இதழ் : 50

சுதந்தர வெள்ளி விழா

மரண தண்டனைக் கைதிகளுக்கு மன்னிப்பு

புதுடில்லி, ஆக. 11—

காந்தி நூற்றாண்டு விழா ஆண்டின்போது மரண தண்டனை நிறைவேற்றப்படவிருந்தவர்கட்கு மன்னிப்பு அளிக்கப்பட்டதுபோலவே, இந்த சுதந்தர வெள்ளி ஆண்டிலும் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டியவர்களுக்கு மன்னிப்பு அளிப்பது என்று மத்திய அரசு முடிவு செய்தது. இது சம்பந்தமான உத்தரவுகள் மாநில அரசுகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

விலை உயர்வுக்கு மத்திய அரசே காரணம்

பற்றுக்குறை நிதி முறை--கடுமையான மறைமுகவரிகள்-தவறான விநியோகம்

பதுக்கல்--கள்ளச் சந்தை வியாபாரிகள் நடத்தும் போட்டிப் பொருளாதாரம்

மக்களவையில் இரா. செழியன் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 11—

"பொருளாதார நிலைமை மோசமானதற்கும் விலைகள் உயர்ந்ததற்கும் மத்திய அரசே காரணமாகும்.

'சிக்கனமாகப் பயன்படுத்தும்படி மக்களுக்கு ஆலோசனை கூறுவதுடன் நின்றுவிடாமல், கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் -- பதுக்கல் பேர்வழிகள் நடத்தும் போட்டிப் பொருளாதார'த்தைத் தடுக்க அமைச்சர்கள் ஏதாவது செய்யவேண்டும்.

"பற்றுக்குறை நிதி முறை -- கடுமையான மறைமுக வரிகள் -- தவறான விநியோகம் ஆகியவை இப்போதைய விலை உயர்வுக்கான சில காரணங்களாகும்.

"அரசாங்க அறிக்கைகளின்படி சென்ற செப்டம்பரில் பணவீக்கம் கட்டுப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கும் போது, இப்போது, 'விலை உயர்வுக்குப் பணவீக்கம்தான் காரணம்' என்று அரசு வாதிப்பது புரியவில்லை"

என்று, மக்களவையில், நாடாளுமன்ற அவைகளின் தி. மு. க. குழுத் தலைவர் திரு. இரா. செழியன் அவர்கள், இந்தியாவில் பண்டங்களின் விலை உயர்வு பற்றிய விவாதத்தின்மீது பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"பதுக்கல்காரர்களுக்கும் -- கள்ளமார்க்கெட்டுக்காரர்களுக்கும் நிதியமைச்சர் ஒய். பி. சவாண் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்; கள்ள மார்க்கெட்டுக்காரர்கள், விளக்குக் கம்பத்தில் தூக்கிலிடப்படுவார்கள்' என்று ஜவகர்லால் நேரு கூறியதை எடுத்துக் கொண்டதுபோலவே, இதையும் நான் உண்மையாக எடுத்துக் கொள்கிறேன்; ஆனால், அவர்களைத் தூக்கிலிடுவதற்குப் பதிலாக மாலைகள்தான் போடப்படுகின்றன."

மது தண்டவாதே:— "கயிறு விலை அதிகமாயிற்றே!"

துணை அமைச்சர் கே. ஆர். கணேஷ் :— "இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டியது மாநில அரசுகள்தான்!"

சாமானிய மக்கள் பாதிக்கப்பட்டனர்

விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு தவறியதாக எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களும் புகார் கூறினர்.

இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வு பற்றிய விவாதத்தைத் தொடங்கிவைத்து பிரசன்ன பாய் மேத்தா பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பண்டங்களின் விலை உயர்வு சாமானிய மனிதனுடைய வாழ்க்கையைப் பெரும அளவில் பாதித்துவிட்டது.

இப்போதைய நிலைமைக்கு அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையே காரணமாகும்.

'விலைவாசி உயர்வு உலகம் முழுவதிலும் உள்ள நிலைமை' என்று சொல்வதில் பயனில்லை.

தொழில் -- வேளாண்மை உற்பத்தி வேகத்தை நிலைநிறுத்த அரசு தவறிவிட்டது.

பற்றுக்குறை நிதிமுறை இருக்கிறது; கறுப்புப் பணத்தால் ஏற்படும் நிர்ப்பந்தம் கட்டுப்படுத்தப்படவில்லை; விநியோக ஏற்பாடு திருப்திகரமாக இல்லை.

விலைவாசியைக் கட்டுப்படுத்த கடுமையான -- தக்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவார்கள்.

வெள்ளி விழாவில் இந்த வேதனை?

எஸ். எம். பானர்ஜி என்பவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

'விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு பரிதாபமாகத் தவறிவிட்டது.

ஆகஸ்டு 15-ந்தேதி நாடு சுதந்தர நாள் வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கும்போது, இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் அவதிப்பட்டுக்கொண்டிருப்பது வேதனை தருவதாகும்.

"அரசாங்கம் தன்னுடைய தவற்றைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு நிலைமையைச் சமாளிக்க எல்லா அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற வேண்டும்.

உணவுத் தானிய மொத்த வியாபாரத்தை அரசாங்கம் மேற்கொண்டு -- இன்றியமையாப் பண்டங்களை நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்க வேண்டும்; பஞ்சாலை -- சர்க்கரைத் தொழில்களை நாட்டுடைமையாக்க வேண்டும்.

கறுப்புப் பணத்தை வெளிக்கொணர, நூறு ரூபாய் நோட்டுக்களையும் செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

விலைவாசி உயர்வை ஈடு கட்ட அரசு ஊழியர்களுக்கு மற்றொரு இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்."

விலைவாசிகள் பாதிக்கப்பட்டதேன்?

வி. ஆர். பகத் என்பவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நிலைமையைச் சமாளிக்க குறுகிய கால நீண்ட கால நடவடிக்கைகள் தேவையாகும்.

இந்த ஆண்டில் பற்றுக்குறை நிதியின் அளவு ரூ. 900 கோடியாக இருக்கும்; 1970—71-ல் அது 365 கோடி; 1971—72-ல் அது ரூ. 380 கோடி; இந்தப் பற்றுக்குறை நிதி முறைதான் விலைவாசிகளைப் பாதித்திருக்கிறது."

உற்பத்தி குறைவுக்குக் காரணம் என்ன?

என். என. பாண்டே பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"விநியோக முறை சரியாக இருந்து--கறுப்புப் பணப் புழக்கமும் தடுக்கப்பட்டாலன்றி விலைகளைக் கட்டுப்படுத்த முடியாது.

பல்வேறு இலாகாக்களிடையே ஒருங்கிணைப்பு இல்லாததால் முக்கியமான துறைகளில் உற்பத்தி குறைந்திருக்கிறது; இதில் அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும்.

பதுக்கல்காரர்களுக்குப் பாதுகாப்பு ஏன்?

ஜோதிர்மயி பாசு என்பவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கள்ளமார்க்கெட் பேர்வழிகள்-- பதுக்கல் பேர்வழிகள்--கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் ஆகியோரைப் பாதுகாக்க அரசு விரும்புகிறது.

'பெரிய ரூபாய் நோட்டுகளைச் செல்லுபடியற்றதாக்க வேண்டும்--ரொக்கம் வைத்திருப்பதற்கு வரம்பு விதிக்க வேண்டும்' என்பன போன்ற சிபாரிசுகளை வாஞ்சு குழு தெரிவித்திருக்கிறது; தேர்தலில் போட்டியிட வேண்டியிருப்பதால், தலைமையமைச்சர் இவற்றைச் செயல்படுத்தவில்லை."

படித்துப் பட்டம்பெற்ற 5,79,858 பேர் வேலையின்றித் தவிப்பு

தொழில் வளர்ச்சித்துறை அமைச்சரே தகவல் தருகிறார்

புதுடில்லி, ஆக. 11—

"சென்ற ஆண்டு ஏப்ரல் திங்களில் இருந்த நிலவரப்படி, பொறியியல் பட்டம்பெற்றவர்கள் -- தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் -- சாதாரணப் பட்டதாரிகள் -- மொத்தம் 5,79,858 பேர் வேலையில்லாமல் இருந்தனர்"

என்று மக்களவையில் தொழில் வளர்ச்சி, விஞ்ஞான -- தொழில் நுட்பத் துறை அமைச்சர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

"இந்திய அரசு புதிதாக வகுத்து வரும் தொழில் கொள்கையில், நாட்டிலுள்ள விஞ்ஞான -- தொழில் நுட்ப நிபுணர்களைப் பயன்படுத்திக்கொள்ள வகை செய்யப்படும்" என்று அவர் கூறினர்.

சுதந்தர இந்தியாவின் 25 ஆண்டு சாதனை

என். ஜி. கோரே வர்ணனை

பம்பாய், ஆக. 11—

சுதந்தரம் பெற்ற 25 ஆண்டுகளில், ஆட்சியிலிருந்தவர்கள் என்ன சாதித்தார்கள் என்பதை, சோஷலிஸ்டுத் தலைவர் என். ஜி. கோரே வர்ணிக்கையில், மூன்று வார்த்தைகளில் அந்தச் சாதனைகளை உள்ளடக்கிக் கூறினர்.

'வறுமை -- வாக்குறுதிகள் -- விலைகள் -- இந்த மூன்றும் தான் நமது சாதனைகளாகும்"

என்று அவர் வேதனையுடன் குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறியதாவது :—

"வறுமையை ஒழித்துவிடுவதாக அரசு வாக்குறுதி அளிக்கிறது; ஆனால் ஏழை எளியவர்கள், ஒரு கிலோ சர்க்கரையை ரூ 4 கொடுத்து வாங்கும்படி செய்கிறார்கள்; வேறு எந்த சனநாயக நாட்டிலும் இது போன்ற நிலை இருந்தால், இத்தகைய அரசைக் கவிழ்த்துவிட்டிருப்பார்கள்.

"சுதந்தர வெள்ளி விழா ஆண்டில் பசியும் பஞ்சமும் தாண்டவமாடுவது, விதியின் விளையாட்டுகளில் ஒன்றாகும்."

முன்னாள் மன்னர்களுக்கு ரூ. 10.50 கோடி

இந்திரா கட்சி ஆட்சியின் 'வறுமை ஒழிப்பு' நடவடிக்கை?

நாடாளுமன்றத்தில் பூபேஷ் குப்தா இடித்துரை

புதுடில்லி, ஆக. 11—

"முன்னாள் மன்னர்களுக்கு ரூ. 10.50 கோடியை இனாமாக வழங்குவதுதான், ஏழ்மையை விரட்டும் நடவடிக்கையா?"

என்று, வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் பூபேஷ் குப்தா, நேற்று நாடாளுமன்ற மேலவையில் மத்திய அரசை வினவிக் கண்டனம் தெரிவித்தார்.

"உள்துறைத் துணையமைச்சர் கே. சி. பந்த நேற்று மக்களவையில், 'முன்னாள் மன்னர்கட்கு, ரூ. 10.50 கோடி படியாகத் தரப்படும்' என்று அறிவித்தது, என்னை அதிர்ச்சியடையச் செய்தது" என்றும் குப்தா கூறினர்.

"முன்னாள் மன்னர்களுக்குத் தலா ரூ. 5 இலட்சம் தருவதன் மூலம் ஏழ்மையை ஒழிக்கப் போகிறீர்களா?' என்று அவர் வினவினர்.

சில நாட்களுக்குமுன் எதிர்க் கட்சித் தலைவர்களுடன் அரசு இது குறித்து விவாதித்தபோது, எதிர்க் கட்சியினர் இதைக் கடுமையாக எதிர்த்ததாகவும், இறுதி முடிவு எடுக்கப்படுமுன், எதிர்க் கட்சியினர் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமென்று அரசிடம் தெரிவிக்கப்பட்டிருந்தும், அரசு தன் விருப்பம்போல இம்முடிவை மேற்கொண்டதாகவும் குப்தா குறிப்பிட்டார்.

அரசின் இம்முடிவை மேலவையில் அறிவிக்காமல் இருந்ததற்கும் குப்தா கண்டனம் தெரிவித்தார்.

தவறான தகவல் அடிப்படையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள்

[★]

ஹாண்டே -- தங்கமணி கூற்றுகளுக்கு முதலமைச்சர் பதில்

சென்னை, ஆக. 9—

எச். வி. ஹாண்டே :—"சில நாட்களுக்குமுன் சென்னை கண்ணப்பர் திடலில் நடைபெற்ற ஓர் அனுதாபக் கூட்டத்தில், மதுரை மேயர் முத்து, 'குத்துக்குக் குத்து -- வெட்டுக்கு வெட்டு' என்று பேசியிருக்கிறார்; அந்தக் கூட்டத்தில் முதலமைச்சரும் கலந்துகொண்டிருக்கிறார்; அவர் அதைக் கண்டித்துப் பேசியிருக்கலாம்; அதற்கு மாறாக, 'வன்முறையை நான் விரும்பவில்லை; அப்படி வன்முறையில் ஈடுபடவேண்டும் என்று விரும்பினால், இந்த முதலமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வன்முறைக்கு தலைமை தாங்கவும் தயாராக இருக்கிறேன்' என்று பேசியிருக்கிறார்; ஆகவே, ஆளும் கட்சியினரே........"

முதலமைச்சர் கலைஞர் :—"ஒரு தவறான அடிப்படையிலே பேசிக்கொண்டு போவது நல்லதல்ல; தாங்கள், மதுரை மேயர் முத்து அவர்களது பேச்சையும் -- என் பேச்சையும் -- தவறான தகவல்களை வெளியிடுகின்ற பத்திரிகைகளில் பார்த்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்; 'பலாத்காரம்தான் உகந்த வழி என்றால் அதற்குத் தலைமை தாங்க நான் தயாராக இருக்கிறேன்; ஆனால், நம்முடைய வழி அந்த வழி அல்ல; அண்ணா காட்டிய வழியும் அந்த வழி அல்ல' என்று சொல்லி பேச்சை முடித்திருக்கிறேன்; கடைசியிலே இருக்கின்ற இரண்டு வரிகளை விட்டுவிட்டுப் பேசுவது நல்லதல்ல."

எச். வி. ஹாண்டே :—"ஒன்றை முதலில் சொல்லிவிட்டு, உடனடியாக மறுத்திடும் வாதத்தில் வல்லவர் நமது முதல்வர்; உதாரணமாக மதுரை மாநாட்டில் தனித் தமிழ்நாடுபற்றிப் பேசப்பட்டது; அதை உடனடியாக நிறுத்தாத முதல்வர்........"

முதலமைச்சர் :—"முதலில் எடுத்துக்கொண்ட பிரச்சினையைப்பற்றிப் பேசி முடியுங்கள்; 'பலாத்காரம்தான் உகந்த வழி என்றால், அதற்குத் தலைமை தாங்க நான் தயாராக இருக்கிறேன்; ஆனால் அது நம்முடைய வழி அல்ல -- அண்ணா காட்டிய வழியும் அந்த வழி அல்ல' என்று சொல்லிப் பேச்சை முடித்திருக்கிறேன்."

எச். வி. ஹாண்டே :—"கிருஷ்ணகிரியில் எங்கள் கட்சி வழக்கறிஞர் திருப்பதிமீது கடுமையான குற்றச்சாட்டுக்களின்மீது வழக்குத் தொடரப்பட்டது; ஏதும் அறியாதவர்மீது கடும் குற்றச்சாட்டுக்கள்; இதற்கெல்லாம் முதல்வரே பொறுப்பு."

முதலமைச்சர் :—"அவர்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உண்மையா இல்லையா என்பது நீதிமன்றத்தில் தெரிந்திருக்கும்; ஆனால் அதை நீங்கள் கெடுத்துவிட்டீர்கள்; வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளச் சொல்லி அதைக் கெடுத்துவிட்டீர்கள்; அப்படி நீங்கள் வழக்குகளைத் திரும்பப் பெறச் சொல்லி கெடுக்காமல் இருந்திருந்தால், நீதிமன்றத்தில் உண்மை தெரிந்திருக்கும்."

எச். வி. ஹாண்டே :—"குற்றச்சாட்டுக்களை எல்லாம் போட்டுவிடுகிறீர்கள்; பிறகு, 'நீதிமன்றத்துக்கு வாருங்கள்' என்று சொல்கிறீர்கள்."

முதலமைச்சர் :—"வழக்குகளைத் திரும்பப் பெறச் சொல்லுகிறீர்கள்; 'என்ன என்ன பிரிவுகள் போடப்பட்டது என்றும் சொல்கிறீர்கள்; அது உண்மையா அல்லவா என்பது நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தால் தெரிந்திருக்கும்; அந்த வாய்ப்பை நீங்கள் கெடுத்துவிட்டீர்கள்."

எச். வி. ஹாண்டே :—"விருப்பம்போல வழக்குகளைப் போடுகிறீர்கள்; 'நீதிமன்றத்துக்கு வா' என்கிறீர்கள்; எதிர்க் கட்சியினரை ஒழிக்க இது ஒரு நேர்த்தியான வழிதான்; இது பாசிசம் அல்லாமல் வேறல்ல -- சந்தேகமே இல்லை."

முதலமைச்சர் :—"பாசிச ஆட்சி இப்போது நடக்கவில்லை; பாசிஸ்டு ஆட்சி 1937-ல் தொடங்கி 1967-ல் முடிந்துவிட்டது."

எச். வி. ஹாண்டே :—"இப்போதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது."

திருமதி அனந்தநாயகி :—"1937-முதல் 1967-வரை பாசிஸ்டு ஆட்சி நடந்ததாக முதல்வர் கூறுவதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்."

எச். வி. ஹாண்டே :—"தர்மபுரி தி.மு.க. மாநாட்டிற்குப் போனபோது, கலெக்டர் அவரது இடத்திலிருந்து வெளியேறும்படிக் கூறப்பட்டு -- அங்கு முதல்வர் தங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்; இதற்கெல்லாம் என்ன தேவை?"

முதலமைச்சர் :—"நண்பர் ஹாண்டே தவறான தகவலோடு பேசுகிறார்; நான், கலெக்டர் வீட்டில் தங்கவில்லை; விமலன் என்ற நண்பர் வீட்டில் தங்கியிருந்தேன்."

எச். வி. ஹாண்டே :—"மதுரை மாநாட்டுப் பிரச்சினைக்கு வருகிறேன்; கவர்னரைப் பற்றி நாம் இங்கு பேசுவது கூடாது; கவர்னரிடம் மதுரை மாவட்ட பழைய காங்கிரசுச் செயலாளர் ஒரு மனுவை கொடுத்தார்; 'மாநாட்டுக்குப் பணம் வசூலிக்க அரசு அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டார்கள்' என்று அதில் கூறப்பட்டிருந்தது."

முதலமைச்சர் :—"மாநாட்டிற்கு இப்படியெல்லாம் பணம் வசூலித்தார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி கவர்னரிடம் விண்ணப்பம் கொடுத்தார்கள்; அப்படி விண்ணப்பம் கொடுத்தவர்களிடம், 'அப்படி நடந்தது என்பதை நிரூபிக்க முடியுமா -- ஆதாரம் இருக்கிறதா--சுட்டிக்காட்ட முடியுமா?' என்று கவர்னர் அவர்கள் கேட்டபோது, அவர்கள், 'முடியாது' என்று தெரிவித்துவிட்டார்கள்; அந்தச் செய்தியையும் ஹாண்டே அவர்களுக்குத் தகவலுக்காகத் தருகிறேன்."

எச். வி. ஹாண்டே :—"கட்டாயப்படுத்தி மாநாட்டுக்கு நிதி திரட்டுவது முறைதானா என்பதே கேள்வி."

முதலமைச்சர் :—"அப்படி ஒன்றும் கட்டாய வசூல் நடைபெறவில்லை; பழைய சாதனை -- பழைய அரசியலை நினைவில் வைத்துக்கொண்டு உறுப்பினர் பேசுகிறார்; யாரையும் -- எந்தவிதத்திலும் கட்டாயப்படுத்தவில்லை; அதிகாரிகளை விட்டு மாநாட்டிற்கு வசூல் செய்யவில்லை -- என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

எச். வி. ஹாண்டே :—"நான் அரசியலை உங்களோடுதான் தொடங்கினேன்; அதற்கு முன்னால் இல்லை; 1964-ல்தான் அரசியலுக்கு வந்தேன்."

முதலமைச்சர் :—"எங்களோடு தொடங்கி இப்படி ஆகிவிட்டீர்களே என்பதுதான் கவலை."

எச். வி. ஹாண்டே :—"அதனால்தான், உங்களைப் பற்றி அதிகமாகச் சொல்ல முடிகிறது; வேறு ஒன்றும் இல்லை; தவறுதலாக நினைக்காதீர்கள்; மாநாடு என்றால், கட்சியைப் பற்றிய உருவாகத்தைச் செழுமைப்படுத்தவேயாகும்; ஆனால், மாநாடுகளில் தீப்பொறி பறக்கப் பேசப்படுகின்றது."

முதலமைச்சர் :—"இப்போது தாங்கள் கொண்டுவந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம், கட்சியைப் பொறுத்ததா அல்லது ஆட்சியைப் பொறுத்ததா?"

எச். வி. ஹாண்டே :—"கட்சியால் நடைபெறுகின்ற ஆட்சியைப் பொறுத்தது; அந்தக் கட்சிக்கும் -- இந்த அரசுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிட்டால், பிரச்சினை தீர்ந்தது; 'இந்த மாநாட்டை நடத்திய கட்சிக்கும் -- இந்த ஆட்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை; அது வேறு -- இது வேறு' என்று சொல்கிறீர்களா? இப்படிச் சொல்வதற்காகத் தாங்கள் ஆத்திரப்பட வேண்டாம்."

முதலமைச்சர் :—"இப்பொழுதெல்லாம் எனக்கு ஆத்திரமே ஏற்படுவதில்லை -- அனுதாபம்தான் ஏற்படுகிறது."

எச். வி. ஹாண்டே :—"நானும், உங்கள்பால் அனுதாபத்துடன்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்; நான் பேசும்போது ரொம்ப வருத்தத்தோடுதான் பேசுகிறேன்--'இப்படி ஆகிவிட்டதே தி.மு.க.' என்றுதான் ரொம்ப வருத்தப்பட்டுப் பேசுகிறேன்."

முதலமைச்சர் :—"அதே நேரத்தில் நான், டாக்டர் ஹாண்டே அவர்களைப் பற்றி மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்; காரணம், 'அவர்களது தலைமையில் இப்படிப்பட்டதொரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள்; எனவே, 'டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு எவ்வளவு உயர்வு ஏற்பட்டிருக்கிறது' என்று எண்ணிப் பெருமைப்படுக் கொண்டிருக்கிறேன்."

டி. என். அனந்தநாயகி :—"நமது முதலமைச்சர் அவர்கள், அவருக்கே உள்ள சாமர்த்தியத்தால் இதை வேறுவிதமாகச் சொல்ல விரும்புகிறார் என்று எண்ணத் தோன்றுகிறது; ஹாண்டே தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றார்; 'முதலில் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை ஆதரிப்பது' என்ற நியதியின் அடிப்படையில்தான் எதிர்ப்பில் இணைந்திருக்கின்றோமே தவிர, அவரவர் கொள்கையில் தனித் தனியாகத்தான் இருக்கின்றோம்; எதிர்ப்பில்தான் கூட்டு சேர்ந்திருக்கின்றோம்; 'ஹாண்டே தலைமையில் எல்லாக் கட்சிகளும் இணைந்து போய்விட்டன' என்று சொல்லுவது தவறாகும்."

முதலமைச்சர் :—"ஹாண்டே தலைமையில் இயங்கவில்லை -- என்று சொன்னதற்கு மிகவும் நன்றி; ஒரு சிலர், தங்கள் தொகுதியில நம்பிக்கையினை இழந்துவிட்ட காரணத்தினால், இங்கே என் பேரில் நம்பிக்கை இல்லை என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள்; இதுவும் ஒரு வேடிக்கைதான்."

டி. என் அனந்தநாயகி :—"முதல்வர் மறைமுகமாக என் போன்ற ஒரு தனி உறுப்பினரைத் தாக்கிடலாமா?"

முதலமைச்சர் :—"நான், 'ஒரு சிலர்' என்றுதான் சொன்னேன்; அதை அம்மையார் அவர்கள் இப்படி எடுத்துக் கொண்டால், அது என் குற்றம் இல்லை."

பேரவைத் தலைவர் :—"உறுப்பினர் அவர்கள், தாங்களே வம்பை வரவழைத்துக் கொள்கிறார் என்று கருதுகிறேன்; முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது, 'ஹாண்டே அவர்களுடைய தீர்மானத்தை எல்லோரும் ஆதரிக்கும் நிலைமை இருக்கிறது' என்பதுதான்; முதலமைச்சர் அவர்களுக்கு சில உரிமைகள் உண்டு -- அதன்படி, அவர்கள் ஒரு சில நிலைமைகளைக் குறிப்பிட்டார்கள்; அதாவது, கட்சி மாறுவது; ஒரு கட்சியிலிருந்து வேறு ஒரு கட்சிக்குப் போவது போன்றவற்றில் -- திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்டு -- எல்லாக் கட்சியினருக்குமே அதில் ஒரு தெளிவான கொள்கையில்லை; அதைமொட்டித்தான் அவர்கள் அப்படிக் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன்; எனவே அவர்கள் கூறியதை 'இன்சுனிவேஷன்' என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை."

எச். வி. ஹாண்டே :—"மாநில சுயாட்சி முதலில் கேட்கப்படுமென்றும், கொடுக்கப்படாவிட்டால் தனித் தமிழ்நாடு கேட்கப்படலாமென்றும் மதுரை மாநாட்டில் அரை டஜன் முக்கியஸ்தர்களுக்கு மேல் பேசியிருக்கிறார்கள்."

முதலமைச்சர் :—"தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டும் -- என்று மதுரை மாநாட்டில் யார் பேசினார்கள்? குறிப்பிட்டுக் காண்பிக்க முடியுமா?"

எச். வி. ஹாண்டே :—"ஆசைத்தம்பி பேசினார்; ஆதாரம் வேண்டுமானால் காண்பிக்கிறேன்."

முதலமைச்சர் :—"ஆசைத்தம்பி என்ன பேசினார்? -- 'சனநாயக மரபுகளுக்கு முரணாக இல்லாமல் -- சனநாயக அடிப்படையில் இயங்கும் வேறு ஒரு கட்சியினுடைய ஆட்சியைக் கலைக்கமாட்டார்கள் என்றே கருதுகிறேன்; அப்படிக் கலைத்துவிட்டால் -- சனநாயகத்திற்குப் புறம்பான முறைகளில் இதைக் கலைத்துவிட்டால் -- பிறகு, 'தமிழ்நாடு தமிழர்களுக்கே' என்று மக்கள் குரல் கொடுப்பார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை' என்றுதான் சொன்னார்; 'கலைக்கக் கூடாது' என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் அப்படிச் சொல்லப்பட்டதே தவிர, 'தமிழ்நாடு தமிழர்களுக்கே ஆக வேண்டும்' என்ற அந்தக் கொள்கையில் இல்லை; திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் அது இல்லை."

கே. டி. கே. தங்கமணி :—"ஆனால், 'கொடுத்தால் மாநில சுயாட்சி—மறுத்தால் தனியாட்சி' என்று அட்டைகளைத் தாங்கிக்கொண்டு மதுரை மாநாட்டு ஊர்வலத்தில் முழக்கமிட்டு வந்தார்களே!"

முதலமைச்சர் :—"வாதம் செய்வதற்காக எதையாவது முதலில் உங்கள் பத்திரிகையில் எழுதிக்கொள்ளுவது -- பிறகு அதை வைத்துக்கொண்டு வாதம் செய்வது என்று இருந்தால், என்ன செய்ய முடியும்?"

கே. டி. கே. தங்கமணி :—"நான் அந்த முழக்கங்களை நேரிலேயே கேட்டவன்; அப்படிப்பட்ட முழக்கங்களைக்கொண்ட அட்டைகளை அவர்கள் ஊர்வலத்தில் தாங்கிக்கொண்டு வந்ததை நேரிலேயே பார்த்தவன்; 'கொடுத்தால் மாநில சுயாட்சி -- மறுத்தால் தனியாட்சி' என்று முழக்கமும் இட்டனர்; எழுதிய அட்டைகளையும் தாங்கி வந்தார்கள்."

முதலமைச்சர் :—"அப்படி யாரும் முழக்கமிடவில்லை; தங்கமணி அவர்கள் உண்மைக்குப் புறம்பாகப் பேசுகிறார்."

எச். வி. ஹாண்டே :—"முதலமைச்சர்தான் உண்மைக்குப் புறம்பாகப் பேசுகிறார் என்றும் சொல்லலாம் அல்லவா? அந்த மாநாட்டில் பேசியவர்கள் பலரும், 'எந்தக் காலத்திலே இந்தியா ஒன்றாக இருந்தது -- எந்தக் காலத்திலும் இந்தியா ஒன்றாக இருந்ததில்லை -- தனித் தனியாகத்தான் இருந்தது' என்று பேசி, 'தனியாகப் பிரிய வேண்டும்' என்ற எண்ணத்தை மறைமுகமாகப் பொதுமக்கள் மனதில் படும்படி வலியுறுத்திப் பேசினார்கள்."

முதலமைச்சர் :—"காரணம் இல்லாமல் -- தேவையில்லாமல், 'இந்தியா ஒரு கொடி ஆட்சியின் கீழ்தான் இருக்கவேண்டும்; இன்னொரு கட்சியின் ஆட்சி இங்கே இருக்கக்கூடாது' என்ற நோக்கத்தில இங்கே உள்ள ஆட்சி கலைக்கப்படுமானால், 'தமிழ்நாடு ஏன் பிரியக்கூடாது என்ற எண்ணம் மக்கள் மனதில் ஏற்படும்' என்பதுதான் ஆசைத்தம்பியினுடைய பேச்சு ஆகும்."

எச். வி. ஹாண்டே :—"தேவையில்லாமல் சிம்சன் விவகாரத்தில் தி. மு. க. அரசு தலையிடுகிறது."

முதலமைச்சர் :—"சிம்சன் பிரச்சினை பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசினார்; 'போராட்டம் ஆரம்பமாவதற்குக் காரணம் முன்னேற்றக் கழக அரசுதான்' என்று சொன்னார்கள்; அப்போது முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கோபால் தொழிற்சங்கத் தலைவராக இருந்தார்; அவரை எப்படியாவது விலக்கிவிட வேண்டுமென்று மற்ற கட்சிகளெல்லாம் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் போட்டார்கள்; அதை ஏற்று, கோபால் அவர்களை விலக வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்; அவரும் விலகிவிட்டார்; அதன்பின், குசேலரைத் தலைவராக்க முயற்சி செய்தார்கள்; நான் அப்போதே சட்டமன்றத்தில்கூட சொன்னேன் -- 'யாரை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள்; வன்முறைக்கு இடங்கொடாதீர்கள்' என்று! கோபால் தலைவர் பதவியிலிருந்து விலகிய பிறகு, ஐந்து பேர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் திருமதி அனந்தநாயகிகூட இருந்தார்........"

டி. என். அனந்தநாயகி :—"ஆறு பேர் அடங்கிய குழு."

முதலமைச்சர் :—"குழு அமைக்கப்பட்ட சிறிது நாட்களுக்குள்ளேயே எங்களால் சமாளிக்க முடியவில்லை; எனவே, 'குழுவைக் கலைத்துவிடுகிறோம்' என்று சொல்லி கலைத்துவிட்டார்கள்; அதன் பிறகு குசேலரைப் பற்றி பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளிலே எழுதினார்கள் -- 'அவர்தான் தலைவராக வேண்டும்' என்று; பின்னால் நடைபெற்ற தேர்தலில், குசேலர் போட்டியில்லாமல் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அதற்குப் பிறகு, முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கத் தலைவர் பிரதாப் சந்திரன் கொலை செய்யப்பட்டார்; அதைப்பற்றி ஹாண்டே அவர்கள் ஏதாவது சொல்வார் என்று எதிர்பார்த்தேன் -- ஆனால் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை; யாரும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை -- கண்ணீர் சிந்தவில்லை; ஹாண்டே அவர்களும் கவலைப்படவில்லை; மற்றவர்களும் அனுதாபம் காட்டவில்லை. ஆனால், 'வன்முறையாளர்கள் சைக்கிள் செயினால் தாக்கினார்கள் -- அக்கிரமம்' என்று சொன்னார்கள்; 'ஓர் உயிர் போய்விட்டதே' என்று யாரும் கவலைப்படவில்லை; இது, மனிதாபிமானத்திற்கு அழகல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

எச். வி. ஹாண்டே :—"அதைப்பற்றி நீங்கள் யாரும் கண்ணீர்விடவில்லை; கண்ணீர் விட்டதாக நான் கேள்விப்படவும் இல்லை; துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தவர்களுக்காகக்கூட கண்ணீர் விடவில்லை."

முதலமைச்சர் :—"ஹாண்டே தவறான தகவலைத் தருகின்றார்; துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றஉடனேயே நான் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்திருக்கிறேன்; ஆனால் கல்லக்குடி போராட்டமானாலும் சரி -- அல்லது இராஜாஜி அவர்கள் ஆட்சிக் காலத்திலானாலும் சரி -- 1967-ம் ஆண்டுக்குமுன்னால் துப்பாக்கிப் பிரயோகத்தில செத்தவர்களுக்கு ஒரு ஐந்து பைசா காசுகூட, வழங்கப்படவில்லை; இப்பொழுது இறந்தவர்களுக்கு ரூ. 5,000 வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது."

எச். வி. ஹாண்டே :—"ரூ. 5,000 கொடுத்தாலும் போன உயிர் வராது."

ஜே. ஜேம்ஸ் :—"முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, 1967 வரையில் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு அதுவரை இருந்த அரசு எந்த விதமான நிதி உதவியும் அளிக்கவில்லை என்று கூறினார்கள்; அது தவறு; 1965 என்று நினைக்கிறேன் -- அன்றைக்கு இருந்த அரசாங்கம், நாகர்கோயிலில் நடந்த துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தவர் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் நிதியுதவி அளித்திருப்பதை அவர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

முதலமைச்சர் :—"1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, 'உயிரிழந்தவர்கள் 50 பேர்' என்று அப்போது இருந்த முதலமைச்சர் அவர்களே கணக்குக் கொடுத்தார்கள்; அந்த ஐம்பது பேர்களில் எத்தனைப்பேர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி தரப்பட்டது?"

கே. டி. கே. தங்கமணி :—"எங்களிடத்திலே மெஜாரிட்டி இருக்கிறது; ஆகவே எப்படியும் நாங்கள் கொண்டுவரும் தீர்மானத்தை நிறைவேற்றி விடுவோம்; நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள் -- என்று கவனக்குறைவாக இருக்கவேண்டாம்; அல்லது நாங்கள் சொல்வதை அலட்சியப்படுத்த வேண்டாம் என்று முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

முதலமைச்சர் :—"உங்களுடைய தீர்மானத்தை அலட்சியப்படுத்துவதாகவோ அல்லது உங்களுடைய பேச்சைக் கவனிக்காமல் இருப்பதாகவோ கூறுவது மிகமிகப் பொருத்தமற்ற ஒன்றாகும்; 'மதிப்பளிக்க வேண்டும்' என்பதற்காகத்தான் அவ்வளவு அமைச்சர்களும் இருக்கின்றோம்; 'அலட்சியப்படுத்தக் கூடாது' என்பதற்காகத்தான் இடையிடையே சமாதானம் சொல்லி வருகிறோம்."

கே. டி. கே. தங்கமணி :—"நன்றி."

—சட்டப் பேரவையில்

சுதந்தர விழாவின் குறிக்கோள்

புதுடில்லி, ஆக. 10—

"இந்த ஆண்டில், குறைந்தது நாள் ஒன்றுக்கு ஒரு தாழ்த்தப்பட்டோர் வட்டாரம் -- என்ற விகிதத்தில், ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள சமுதாயத்தின் நலிந்த பகுதியினரும் மின்சார வசதி பெறுவதற்கான திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்; இத்திட்டம், இந்தியச் சுதந்தர வெள்ளி விழா ஆண்டின் ஒரு குறிக்கோளாக இருக்க வேண்டும்"

என்று மத்திய அரசின் பாசன -- மின்துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு முழுவதிலும் பொதுக்கூட்டங்கள்

அமைச்சர்கள் கலந்து கொள்ளும் இடங்கள்

ஆகஸ்டு 15-ந் தேதியன்று தமிழ்நாடு முழுவதிலும் சுதந்தர வெள்ளி விழாப் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் விவரம் வருமாறு:—

சென்னை :	முதலமைச்சர் கலைஞர்
தஞ்சை :	நாவலர் நெடுஞ்செழியன்
மதுரை :	பேராசிரியர் க. அன்பழகன்
திருச்சி :	என். வி. நடராசன்
காஞ்சி :	திருமதி சத்தியவாணிமுத்து
தர்மபுரி :	ப. உ. சண்முகம்
வேலூர் :	செ. மாதவன்
கோவை :	எஸ். ஜே. சாதிக் பாட்சா
நெல்லை :	சி. பா. ஆதித்தனார்
கடலூர் :	மன்னை ப. நாராயணசாமி
சேலம் :	க. இராசாராம்
நீலகிரி :	ஓ. பி. இராமன்
சிவகங்கை :	எஸ். ராமச்சந்திரன்
நாகர்கோயில் :	மு. கண்ணப்பன்

இந்திய விடுதலை வெள்ளி விழா

அமெரிக்கத் தூதர் கீட்டிங் வாழ்த்து

"இந்தியா தனது விடுதலை வெள்ளி விழாவைக் கொண்டாட ஆயத்தம் செய்யும் இவ்வேளையில், உலகம் நெடுகிலிருந்தும் புதுடில்லியில் வந்து குவியும் ஆயிரக்கணக்கான வாழ்த்துச் செய்திகளோடு எனது வாழ்த்துக்களையும் சேர்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்துக்கு முன்பும் இந்தியாவில் பணியாற்றியிருக்கிறேன் -- இப்போதுப் பணியாற்றியுள்ளேன்.

புகழ்மிக்க மவுண்ட்பேட்டனின் துணைவரான ஜெனரல் வீலர் தலைமையில் -- அவரது ஊழியர் குழாத்தில் ஓர் அதிகாரியாக இரண்டாவது உலகப் போரின் போது நான் இந்தியாவில் பணிபுரிந்தேன்; இது உங்களில் பலருக்குத் தெரியும்; அப்போது நான் இந்நாட்டை நன்கு அறியலானேன்.

இருபத்து மூன்று ஆண்டுகள் கழித்து, அமெரிக்கத் தூதராக நான் இங்கு திரும்பினேன்.

சிறப்புமிக்க காலம்

இடைப்பட்ட ஆண்டுகள் மிகவும் சிறப்புடையவை; இத்தகு சிறப்புமிக்க காலங்கள் வரலாற்றிலேயே மிக அரியன.

இரண்டாவது உலகப் போர் வெற்றி கண்டது; நீண்ட கடும் போராட்டத்துக்குப் பின்பு இந்தியா விடுதலை அடைந்தது; உலகம் அணு யுகத்துக்குள் அடியெடுத்து வைத்தது; மனிதன் விண்வெளியை வெற்றி கொள்ளத் தொடங்கினான்!

இந்தியாவில் மக்கள் அனைவருக்கும் பொதுக்கல்வி கைகூடியது; 1951-ம் ஆண்டுக் கணக்குப்படி, 2½ கோடி மாணவர்கள் பள்ளியில் படித்தனர்; இன்றோ -- 7 கோடியே 40 இலட்சம் பேருக்கு மேல் படிக்கின்றனர்; 6 முதல் 11 வயதுள்ள குழந்தைகளில் பத்தில் எட்டுபேர் இப்பொழுது கல்வி பயில்கின்றனர்; 1950-ல் இதில் பாதிப்பேர்தான் படித்தனர்.

இதுவும் இமயம் போன்ற ஒரு சாதனை; பிற சாதனைகளும் உண்டு.

இன்று இந்தியாவில் எட்டுக்கு ஒரு கிராமம் மின்விசை பெற்றுள்ளது; 1951 கணக்குப்படி -- நூற்றுக்கு ஒரு கிராமம்தான் மின்விசை பெற்றிருந்தது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியரின் சராசரி ஆயுட்காலம் 32 ஆண்டுகள் -- இன்று 52 வயது.

'அமெரிக்காவின் தூதர்' என்ற முறையில், இந்தியாவுக்கும் -- அதன் குடிமக்களுக்கும் எனது அரசிடமிருந்தும் -- அமெரிக்க மக்களிடமிருந்தும் இந்தியாவின் 25 ஆண்டு விடுதலை விழாவுக்கு உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்."

சுதந்தர வெள்ளி விழா

சிறப்பாகக் கொண்டாட தமிழக அரசு ஏற்பாடு

சென்னையில் இரு வாரக் கலை நிகழ்ச்சிகள்

மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் கூட்டங்களில் அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, ஆக. 10—

சுதந்தர நாள் வெள்ளி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது; 14-8-72 முதல் 28-8-72 வரையில் இரு வார கலை விழாக்கள் நடைபெறும்.

தமிழக அரசு செய்தி விளம்பரத் துறை -- அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலையம் -- இரா மக்கள் தொடர்பு நிறுவனங்கள் ஆகியவைகள் இணைந்து இந்த இரு வாரக் கலை விழாவை நடத்துகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இரு வார விழாவில, பொருட்காட்சி -- இலவசத் திரைப்படங்கள் -- இசை நிகழ்ச்சிகள் -- நாடகங்கள் நடத்தப்படும்.

பொருட்காட்சியில், இந்திய நாடு பொருளாதார முன்னேற்றத்துக்காகத் தன் முயற்சியை மட்டும் நம்பி 25 ஆண்டுகள் வீர நடைபோட்ட நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இந்தப் பொருட்காட்சி, 14-ந் தேதி முதல் 28-ந் தேதி வரையில் நாள்தோறும் மாலை 3-மணி முதல் இரவு 8-மணி வரை திறந்திருக்கும்; பொருட்காட்சிக்கு கட்டணம் எதுவும் இல்லை; இந்தப் பொருட்காட்சியினை இந்திய விளம்பரத் துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

அதே இடத்தில் இந்திய அரசின் சார்பில் இலவசமாகத் திரைப்படம் (செய்தித் தொகுப்பு) காட்டப்படும்; இந்தப் படங்கள் இரவு 7-மணி முதல் 8-30 மணி வரை காட்டப்படுகின்றன.

இரவு 8-30 மணி முதல் 10-30 மணி வரை இசை -- நாடக நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

இந்த இலவசத் திரைப் படமும், இசை -- நாடக நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் -- அங்குள்ள வட்டார விளம்பர அதிகாரியால் நடத்தப்படும்.

கவியரங்கம்

ஆக. 14-ந் தேதி காலை 10 மணிக்கு இராஜாஜி மண்டபத்தில் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் கவியரங்கம் நடைபெறும்.

இந்தக் கவியரங்கத்தில் கவிஞர் கண்ணதாசன், சுத்தானந்த பாரதியார், எஸ். டி. சுந்தரம், டி. எம். சி. ரகுநாதன், கே. சி. எஸ் அருணாசலம், வானம்பாடி, திருமதி சவுந்திரா கைலாசம் ஆகியோர் கலந்துகொண்டு கவி பாடுவார்கள். 15-ந் தேதி காலை 9-30 மணிக்கு இதை சென்னை வானொலி நிலையம் அஞ்சல் செய்யும்.

அன்று மாலை 4-மணிக்கு சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில் பல்வேறு பிரச்சார நிறுவனங்களின் கலை விழாவை முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைப்பார்.

மாலை 5-மணிக்கு கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் தேநீர் விருந்து; 6-மணியிலிருந்து இரவு 8-மணி வரையில் அங்கு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஒளி விளக்கு அலங்காரம்

இரவு 11 மணிக்கு சென்னைக் கடற்கரைச் சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்படும்; முதலமைச்சர் கலைஞர் விளக்கேற்றி வைப்பார்.

இரவு 12 மணிக்கு சட்டமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் நடக்கிறது; இதில் ஆளுநர் உரையாற்றுகிறார்; முதலமைச்சரும் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்கின்றனர்.

கொடியேற்று விழா

ஆக. 15-ந் தேதி காலை 8-மணிக்கு சென்னை கோட்டையில் கொடியேற்று விழா நடக்கிறது. இந்திய விமானப் படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் ஏற்றுக்கொள்வார்; பின்னர், கொடியேற்றி வைப்பார்.

அலங்கார வண்டிகள்

மாலை 5-மணிக்கு கடற்கரை சாலையில் அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு நடைபெறும்; அரசின் சாதனைகளை குறிக்கும் 30 அலங்கார வண்டிகள் அணிவகுத்துச் செல்லும்.

ஆளுநர், மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம், முதலமைச்சர் கலைஞர் ஆகியோர் காந்தி சிலை அருகில் நின்று அலங்கார வண்டிகளின் அணிவகுப்பைப் பார்வையிடுவர்.

பொதுக்கூட்டம்

இரவு 7-மணிக்கு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள சீரணி அரங்கில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் நடைபெறும்; முதலமைச்சர் கலைஞர் தலைமை தாங்குகிறார்; மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராமும் கலந்துகொள்கிறார்.

இரவு 8-30 மணியிலிருந்து 9-30 மணி வரை திரைப்பட இசை அமைப்பாளர் எம். எஸ். விசுவநாதன் குழுவினர் இன்னிசை நடைபெறும்; 9-30 மணியிலிருந்து 10 மணி வரை வான வேடிக்கைகள் நடைபெறும்.

நள்ளிரவில் சென்னை மாநகராட்சி சிறப்புக் கூட்டம்

சுதந்தர வெள்ளி விழாவையொட்டி, ஆக. 14 நள்ளிரவில சென்னை மாநகராட்சியின் சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

மேயர் காமாட்சி செயராமன் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவார்.

கூட்டம் தொடங்கிதும், விடுதலை போராட்டத்தில் உயர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்படும்; அனைவரும் இரண்டு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்பர்.

பிறகு, குடியரசுத் தலைவரிடமிருந்து வந்த சிறப்புச் செய்தியை மேயர் படித்து உரையாற்றுவார்; அதையடுத்து, துணை மேயர் -- கட்சித் தலைவர்கள் -- ஆணையாளர் உரையாற்றுவர்.

15-ம் நாள் காலை 10 மணிக்கு வழக்கம்போல் மாநகராட்சி மன்ற ரிப்பன் கட்டடத்தில் மேயர் தேசிய கொடியேற்றுவார்.

முன்னதாக, 8-30 மணிக்கு எல்லா வட்டங்களிலும் மையமான பள்ளிக்கூடங்களில் கொடியேற்று விழா நடைபெறும்.

கண்காட்சி வண்டிகள்

சென்னை, ஆக. 10—

சுதந்தர வெள்ளி விழாக் கொண்டாட்டங்களையொட்டி, '25 ஆண்டு பயணம்' என்ற கண்காட்சிக்கு மத்திய செய்தி--விளம்பரத் துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

நாடு சுதந்தரமடைந்த பிறகு நாம் எவ்வாறெல்லாம் முன்னேறி வந்துள்ளோம்--தாண்டி வந்துள்ள மேடு பள்ளங்கள் -- நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்தையும் விளக்கும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்திருக்கும்.

பதினைந்து நாட்களுக்கு இந்தக் கண்காட்சி நகரில் இயங்கும்; பிறகு தமிழ் நாடெங்கும் சுற்றி வரும்.

இது தவிர, மோட்டார் வண்டியில் ஒரு கண்காட்சியும், இரயில்வே பெட்டியில் ஒரு கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டு, அவை தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலுள்ள கிராம மக்கள் அனைவரும் கண்டுகளிக்கும் வண்ணம் சுற்றிவரும்.

வானொலியில் சிறப்பு நிகழ்ச்சிகள்

சுதந்தர வெள்ளி விழாக் கொண்டாட்டங்களையொட்டி சென்னை வானொலி நிலையம், பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறது.

நகரில் நடைபெறும் தனிச் சிறப்பு வாய்ந்த கலை நிகழ்ச்சிகள் -- தலைவர்களின் உரைகள் -- கருத்தரங்கு நிகழ்ச்சிகள் -- நாடகம் -- பேச்சுக்கள் ஆகியவைகள் ஒலி பரப்பப்படும்.

ஆக. 14 நள்ளிரவில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டம் -- சென்னையில் நடைபெறும் சட்டமன்றக் கூட்டுக் கூட்டம் -- மாநகராட்சிக் கூட்டம் ஆகியவைகளின் தனி நிகழ்ச்சிகளை ஆக. 15, காலை 6-15 மணிக்கு 'ஏ' அலைவரிசையில் மக்கள் கேட்கலாம்.

டெலிவிஷனில் சென்னை நிகழ்ச்சிகள்

சென்னை, ஆக. 10—

சுதந்தர நாள் வெள்ளி விழாவையொட்டிச் சென்னையில் நடைபெறும் அலங்கார நிகழ்ச்சிகளை டெலிவிஷனில் படம் பிடிக்கத் தமிழ்நாடு தகவல் தொடர்புத் துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தப் படம், டெல்லியில் டெலிவிஷனில் காட்டப்படும்.

போராட்ட வீரர்களுக்குப் பொன்னாடை

மதுரை விழாவில் ஏற்பாடு

மதுரை, ஆக. 10—

"சுதந்தர வெள்ளி விழாவையொட்டி 15-ந் தேதி மதுரையில் 320 சுதந்தரப் போராட்ட வீரர்கள் -- முன்னாள் இந்திய இராணுவ வீரர்கள் 10 பேர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்"

என்று மாவட்டக் கலெக்டரும்—மாவட்ட விழாக் குழுத் தலைவருமான சீதாராமதாஸ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

"100 தியாகிகளுக்கு இதே விழாவில் தலா 3 செண்ட் வீட்டு மனை வழங்கப்படும்" என்றும் தெரிவித்தார்.

"தாலுகாக்களிலும் விழா சிறப்பாகக் கொண்டாடப்படும்; 14-ந் தேதி நள்ளிரவில், நாட்டின் சுதந்தரத்தைக் காக்கும் உறுதி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும்" என்றும் அவர் தெரிவித்தார்.

போரில் உயிர்துறந்த வீரர்களின் மனைவியருக்கு தையல் இயந்திரம்

போரில் உயிர்துறந்த 6 இராணுவ வீரர்களின் மனைவிமார்களுக்கு மதுரை மேயர் எஸ். முத்து அவர்கள் பொன்னாடை போர்த்துவார்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் தையல் இயந்திரமும் -- டிரான்சிஸ்டரும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

புதுவை சட்டமன்றம்

ஆக. 14 நள்ளிரவு கூடும்

புதுவை, ஆக. 10—

சுதந்தர வெள்ளி விழாவையொட்டி புதுவை சட்டமன்றக் கூட்டம், ஆக. 14 நள்ளிரவு கூடும்.

கைதிகட்குத் தண்டனை குறைப்பு

சுதந்தர வெள்ளி விழாவையொட்டி புதுவை மாநிலத்தில் கைதிகளுக்கு அளிக்கப்படவிருக்கும் தண்டனைக் குறைப்பும் பற்றி, போலீசுத் துறை அமைச்சர் எஸ். இராமசாமி கூறியதாவது:—

"ஒரு மாதமும் -- அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்; அதற்குமேல் ஆயுள் தண்டனை வரை பெற்றவர்களுக்குப் பல அம்சங்களை வைத்துக் கணக்கிட்டு 2 மாதங்களிலிருந்து ஓராண்டுவரை கழிவுதரப்படும்."

சட்டப் பேரவையில் மசோதாக்கள் தாக்கல்

சென்னை, ஆக. 11—

கோவில்களை நிர்வகிக்கும் அறங்காவலர் (டிரஸ்டி) குழுவில் தாழ்த்தப்பட்டோர் அல்லது மலைசாதி வகுப்பைச் சேர்ந்த ஒருவரைக் கண்டிப்பாக அறங்காவலராக நியமிக்க வகைசெய்யும் மசோதாவை அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் தாக்கல் செய்தார்.

வீட்டுவாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஆயுட்காலத்தை மேலும் நீடிக்க வழி செய்யும் மசோதாவை அமைச்சர் க.இராசாராம் அவர்கள் தாக்கல்செய்தார்.

மதுரை மாநகராட்சி மேயர் -- துணை மேயர் ஆகியோரின் பதவிக் காலத்தை நிர்ணயித்தும் -- நீடிக்கவும் வகைசெய்து பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலான மசோதாவை உள்ளாட்சித்துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தாக்கல் செய்தார்.

பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தை கன்னியாகுமரிமாவட்டத்திற்கு விரிவுபடுத்த வழிவகை செய்யும் மசோதாவை வருவாய்த்துறை அமைச்சர் ம.உ. சண்முகம் அவர்கள் தாக்கல் செய்தார்.

கூடுதல் நிலவரி—தண்ணீர் தீர்வை சட்டத்திருத்த மசோதா—பொதுக் கட்டடங்கள் உரிமம் வழங்குதம் மசோதா ஆகியவையும் தாக்கல் செய்யப்பட்டன.

இந்தியா--இலங்கை ஒப்பந்தம்

நிறைவேற்றப்படும்விதம் பற்றி மத்திய அமைச்சர்

புதுடில்லி, ஆக. 11—

"ஸ்ரீலங்காவுக்கும்--இந்தியாவுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி, நடப்பு ஆண்டு ஜுன் 30-ம் நாள் வரையில் 1,29,915 பேர்களுக்குஇந்தியா குடிஉரிமை வழங்கியிருக்கிறது; அதேகாலத்தில் 31,277 பேருக்கு மட்டுமே மட்டுமே ஸ்ரீலங்கா குடியுரிமை அளித்திருக்கிறது"

என்று மக்களவையில், வெளிவிவகாரத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரசு வளர்க்கும் சோஷலிசம்

உச்சவரம்புச் சட்டத்தை மீறியவர்கள் மாவட்டத் தலைமை தாங்கும் விநோதம்

முதலமைச்சர் கலைஞர் இடித்துரை

சென்னை, ஆக. 10—

இராம. அரங்கண்ணல் :—"மதிப்பிற்குரிய மன்றுடியார் அவர்கள் முன்னாள் காங்கிரசு அமைச்சர்; இப்போதும் காங்கிரசில்தான் இருக்கிறார்; அவர் 1,900 ஏக்கருக்குச் சொந்தக்காரர்."

ஏ. சுப்பிரமணியம் :—"இப்போது வடபாதிமங்கலம் உங்கள் பக்கத்தில்தானே இருக்கிறார்கள் ?"

அரங்கண்ணல் :—"அவர் எங்களிடம் இல்லை -- உங்களிடம்தான் இருக்கிறார்; அடுத்து, 'பெரியகாட்டார்' என்று ஒருவர்; அவர் இருக்கும் கட்சி -- சங்கர் தயாள் சர்மா அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள கட்சி; அவர், சேலம் மாவட்ட காங்கிரசுத் தலைவர்; 'அர்த்தநாரீசுவர கவுண்டர்' எனும் அவருக்கு 700 ஏக்கர் நிலம் சொந்தம்."

ஏ. சுப்பிரமணியம் :—"700 ஏக்கர் வைத்திருக்கிறார் என்றால், அதை விட்டுவைத்த அரசினைக் குற்றஞ்சாட்டுகிறீர்களா அல்லது இன்னும் விட்டு வைத்திருக்கும் அரசைக் குற்றஞ்சாட்டுகிறீர்களா ?"

முதலமைச்சர் :—"முன்பு இருந்த ஆட்சி அதை விட்டுவிட்டது; இப்போதுள்ள ஆட்சி அவற்றைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது."

ஏ. சுப்பிரமணியம் :—"அந்த முடிவை வரவேற்கிறேன்; விரைவில் செயல்படுங்கள்."

முதலமைச்சர் :—"அந்தக் கட்டத்தில்தான் அர்த்தநாரீசுவர கவுண்டர் அவர்கள் எங்கள்மீது வெகுண்டு எழுகின்றார்கள்."

ஏ. சுப்பிரமணியம் :—"அவர்கள் வெகுண்டு எழவில்லை; பல்லாயிரக்கணக்கான ஏழைகள்தான் வெகுண்டு எழுகின்றார்கள்."

முதலமைச்சர் :—"அந்த ஏழைகள்தான் பழி வாங்கப்படுகின்றார்கள் -- அர்த்தநாரீசுவரக் கவுண்டர் போன்றவர்களுடைய சுகபோக வாழ்விற்காக !"

கே.என். குமாரசாமி:—"பட்டக்காரர், பெரிய நிலப்பிரபு என்று குறிப்பிட்டார்கள்; அதை ஏற்றுக்கொள்கிறோம்; அரசாங்கம் நிலத்திற்கான உச்சவரம்பினைக் கொண்டுவந்திருக்கிறது; உபரியான நிலங்களை எடுத்துக்கொள்ள இருக்கிறது; ஆனால் அதே நேரத்தில், அவருடைய தம்பி உங்கள் கட்சியில் இருந்த காலத்தில், அவர் நிலப்பிரபு என்பது உங்களுக்குத் தெரியாதா ? சுயமரியாதை இயக்கத்திலிருந்து -- பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்த அர்ச்சுனன் அவர்கள், நிலப்பிரபு இல்லையா -- நன்கு யோசிக்கவேண்டும்."

இராம. அரங்கண்ணல் :—"குமாரசாமி அவர்கள் பழைய அரசியல்வாதி; எனவே அவர் இறந்தவரைப்பற்றிப் பழித்துப் பேசக்கூடாது; ஆனால், அவரது துணைவியார் பார்வதி அர்ச்சுனன் அவர்கள் எங்கள் கட்சியில் இருக்கின்றார்களா ? அர்த்தநாரீசுவர கவுண்டர் அவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் கட்சி' என்றுகூடச் சொல்லவில்லை; அவர்களுடைய பெயரை இங்கே இழுக்க விரும்பாததுதான் காரணம், ஆனால், சோசலிசத் தத்துவம் பேசிக்கொண்டிருக்கும் ஆளும் காங்கிரசின் மாவட்டத் தலைவர் அவர்; 'விட்டுவைத்தது தவறுதான் -- விரைவில் செயல்படுங்கள்' என்று சொன்னார் சுப்பிரமணியம்; விட்டுவைத்தது நாங்கள் இல்லை -- வேறு கட்சி; இன்று நடவடிக்கை எடுக்கிறோம்; ஆனால், ஆளும் கட்சியில் இருந்துகொண்டு சோசலிசத் தத்துவம் பேசிக்கொண்டிருக்கும் அவர் என்ன செய்திருக்க வேண்டும் ? அர்த்தநாரீசுவர கவுண்டர் அவர்கள், 'எனக்கு இருப்பது 700 ஏக்கர்; இதில் 690 ஏக்கரைத் திருப்பித் தந்துவிடுகிறேன் -- எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லியிருக்க வேண்டும்."

ஏ. சுப்பிரமணியம் :—"அன்றையத்தினம், 'சோசலிஸ்டுக் கட்சி சோற்றுக் கட்சி' என்று கேலி பேசியவர்கள்தான், இன்று, சோசலிசம் பேசிக்கொண்டு பதவியில் இருக்கின்றார்கள் -- இங்கே !"

முதலமைச்சர் :—"அப்படிக் கேலி பேசியவர்கள் யார் என்பதைச் சொல்லுங்கள்."

ஏ. சுப்பிரமணியம் :—"இன்று முதலமைச்சராக வீற்றிருக்கும் அன்றையக் கலைஞர் அவர்கள்தான் !"

முதலமைச்சர் :—"ஒரு பெரும் தவறான தகவலை வைத்துக்கொண்டு சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறார் என ஐயப்படுகிறேன்; 'சோஷலிஸ்டுக் கட்சி சோற்றுக் கட்சி' என்று சொல்லவில்லை; வேண்டுமானால், 'சோஷலிஸ்டுக் கட்சிதான் ஏழைகளுக்குச் சோறு போடும் கட்சி' என்று சொல்லியிருக்கலாம்; 'தவறாகக் காதில் வாங்கிக் கொண்டாரோ' என்று அஞ்சுகிறேன்; ஆனால், அர்த்தநாரீசுவர கவுண்டர் போன்ற பெரும நிலக்கிழார் மாவட்டத் தலைவராக இருந்துகொண்டு சோஷலிசம் பேசும் பாணி, உலகத்தில் இல்லாத விந்தைகளிலே விந்தையாகும்."

டி. என். அனந்தநாயகி :—"பல இலட்சம் ரூபாய்களைப் படத்திற்கு வாங்கும் ஒருவர், சோஷலிசம் கொண்டாடும் ஒரு கட்சியின் பொருளாளராக இருப்பது மட்டும் எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்."

முதலமைச்சர் :—"படத்தில் நடிக்க வாங்கும் தொகைக்குக் கணக்கு இருக்கிறது. அதை அங்கே பார்த்துப் புரிந்துகொள்ளலாம். இங்கே நிலச்சுவான்தார்களைப்பற்றி விவாதிக்கிறோம். நிலச் சீர்திருத்தத்தின் கீழுள்ள உச்சவரம்பு விதிகளையெல்லாம் ஏமாற்றிவிட்டு, 'நங்கள் விவசாயிகளுக்காகப் பாடுபடுகின்றோம்' என்று மாவட்டத்துக்குத் தலைமை தாங்கி சோஷலிசம் பேசுகின்றார்களே -- அந்த அசிங்கத்தைப் பற்றித்தான் இப்போது இங்கே பேசுகிறோம்."

அரங்கண்ணல் :..."சுப்பிரமணியம் அவர்கள், உண்மையிலேயே சோஷலிசவாதி; அவரது சோஷலிசம் பற்றி எனக்குத் தெரியும்; அதேபோன்று, நமது சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், உண்மையிலேயே சோஷலிசவாதிதான்; ஏனென்றால், 'சோஷலிசம் என்றால் சமதர்மம்; அவர்கள், தமது பணியை எல்லாக் கட்சிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டும்; தமது பணிகள் எல்லாக் கட்சிகளுக்கும் பயன்பட வேண்டும் -- என்று ஒவ்வொரு கட்சியிலும் அதைப் பகிர்ந்து கொடுக்கிறார்; அவர் சோஷலிசவாதிதான்."

டி. என். அனந்தநாயகி :—"நான் என்ன -- சமதர்மவாதி இல்லை' என்று சொலகிறாரா அல்லது கிண்டலாகச் சொல்கிறாரா ? அவர் என்ன சொல்லுகிறார் ?

முதலமைச்சர் :—"நண்பர் அரங்கண்ணல் சொல்லுவது, 'இதுவரையில் ஸ்தாபன காங்கிரசில் பரப்பிய சோஷலிசம் போதும்; அதை நிறுத்திவிட்டு, இனி தேசியக் காங்கிரசில் அதைப் பரப்பலாம் என்று பணியாற்றுகிறீர்கள்' என்றுதான் குறிப்பிட்டார்.

டி. என். அனந்தநாயகி :—"இது எங்கள் குடும்பச் சண்டை; அங்கே இருந்தோம் -- இங்கே வந்தோம்; ஆனால், உங்கள் கட்சியில் எவ்வளவு பேரை இழுத்துக்கொண்டிருக்கிறீர்கள் ?"

முதலமைச்சர் :—"ஆம், ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்குப் போனவர்கள் எல்லாம், 'இழுக்கப்பட்டவர்கள்' என்பதை ஒப்புக் கொள்கிறேன்."

டி. என். அனந்தநாயகி ;—"எங்கள் கட்சிக்குள் கொள்கையில் வேறுபாடு இல்லை; இலட்சியத்தில எந்தவிதமான வேறுபாடும் இல்லை."

முதலமைச்சர் :—"ஆக, இரண்டு காங்கிரசுக்கும் கொள்கையில் வித்தியாசம் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள்; இதை நான், இந்திரா காந்தி அவர்களுடைய கவனத்திற்கு இந்தச் சபையின் மூலம் அனுப்பிவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்."

—சட்டப் பேரவையில்

மீண்டும் ரேஷன் வருமா?

வறட்சி நிலை--சமாளிப்பது எப்படி?

மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் நிலைமை விளக்கம்

புதுடில்லி, ஆக. 10—

"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலையைச் சமாளிக்க முடியும்" என்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் பக்ருதீன் அலி அகமது நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மீண்டும் ரேஷன் முறை ஏற்படுத்தத் தேவையில்லை என்றும், உணவு இறக்குமதி இருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் அளித்த நிலைமை விளக்கம் வருமாறு :—

"பருவ மழை தவறியதால் ஏற்படும் பற்றுக்குறையை இப்போது துல்லியமாக மதிப்பிட முடியாது; ஆனால் சிரமங்கள் சமாளிக்கப்படும்.

"உணவுத் தானியம் இறக்குமதி செய்யப்படமாட்டாது; நிலைமையைச் சமாளிக்க இருப்பில் உள்ள தானியம் போதுமானதாகும்.

"பற்றுக்குறை 150 இலட்சம் டன்னாக இருக்கும் என்பது சரியல்ல; நிலைமையைக் கவனித்து வரவேண்டும்; அக்டோபரில்தான் நிலைமை தெளிவாகும்.

நாட்டில் 1,25,000 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன; மேலும் 30,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்படும்; நியாய விலைக் கடைகள் மூலம் அனைவருக்கும் உணவுத் தானியம் வழங்க முடியும்."

'ரேஷன்' முறையால் எப்பிரச்சினையும் தீராது; ஆகவே அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படமாட்டாது.

55 இலட்சம் டன் கோதுமை -- 25 இலட்சம் டன் அரிசி -- 5 இலட்சம் டன் மோட்டாத் தானியங்கள் ஆகமொத்தம் 95 இலட்சம் டன் உணவு கார்ப்பரேஷனிடம் இருப்பில் உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி குறைந்ததற்குக் காரணம், கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்ததேயாகும். கரும்பு உற்பத்திக் குறைவால் வெல்லம், கண்டசாரிக்கு அது திருப்பப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளில் பருப்பு வகைகள் உற்பத்தி பெருகாமல் ஒரே நிலையில் இருந்தது; உற்பத்தியைப் பெருக்கச் சில நிதி ஊக்கங்கள் அளிக்கப்பட வேண்டும் என உணரப்படுகிறது.

புதுடில்லி, ஆக. 11—

"ஆந்திர மாநிலத்தில அனந்தப்பூர் மாவட்டம் ராம்கோரி பகுதியில் தங்கம் கிடைக்கக்கூடும் என ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்திருக்கிறது; இது பற்றித் தயாரிக்கபபட்டுள்ள திட்டத்தை அரசு பரிசீலனை செய்துவருகிறது.

"இப்பகுதியில 100 மீட்டர் தூரம் தோண்டினால் 2,10,000 டன் தங்கம் கிடைக்கக்கூடுமென்றும் 300 மீட்டர் தூரம் தோண்டினால் 25,20,000 டன் தங்கம் கிடைக்கக் கூடுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது."

'டியூப் பிராடக்ட்ஸ்' தொழிலாளர் தகராறில் உடன்பாடு

அமைச்சர் என். வி. நடராசன் தெரிவித்த யோசனையை இரு தரப்பினரும் ஏற்றனர்

சென்னை, ஆக. 11—

ஆவடியிலுள்ள 'டியூப் பிராடக்ட்ஸ்' நிறுவனத்தில, ஊதிய உயர்வு--கிராக்கிப் படி உள்ளிட்ட ஊழியர்களின் கோரிக்கை தொடர்பாக நிர்வாகத்தினருக்கும்--தொழிலாளருக்குமிடையில உடன்பாடு ஏற்பட்டது; இதனால், கடந்த 13—6—72 முதல வேலைநிறுத்தம் செய்துவந்த தொழிலாளர்கள், ஆக. 13-ம் நாளன்று வேலைக்குத் திரும்புவர்.

தொழிலாளர் நலத் துறை செயலாளர் -- ஆணையர் ஆகியோர் முன்னிலையில இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தினர்; இந்தப் பேச்சுவார்த்தையினைத் தொடர்ந்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில் தொழில் நிறுவனத்தினரும் -- தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து பேசினர்; இறுதியில, அமைச்சர் என. வி. நடராசன் அவர்கள் தெரிவித்த முடிவினை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டனர்.

ஊதிய உயர்வு -- அகவிலைப் படி உயர்வையும் மற்றும் சில கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு தொழில் நிர்வாகிகளும்--தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]

கல்லூரிகளில் பரத நாட்டியக் கல்வி

சென்னை, ஆக. 10 —

"கல்லூரிகளில் பரத நாட்டியப் பயிற்சியையும் பாடமாக வைக்கலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது; இதனைச் செயல்படுத்துவது பல்கலைக் கழகத்தைப் பொறுத்தது"

என்று, சட்டப் பேரவையில் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கருநாடக இசைப் பள்ளியில் பரத நாட்டியப் பயிற்சி அளிக்கப்பட்டுவருவதாகவும் அமைச்சர் கூறினார்.

கேள்வி :—"பரத நாட்டியப் பயிற்சி ஆண்கள் கல்லூரியிலும் நடைபெறுமா ?"

பதில் :—"இப்போதே பெண்களுக்கு ஆண்கள்தான் பரத நாட்டியப் பயிற்சியளிக்கிறார்கள்; எனவே, பயிற்சி அளிப்பதற்கு வசதியாக ஆண்களும் பயிற்சி பெறுவது நல்லதுதான்."